This article is published under the Creative Commons CC-BY-ND License
(http://creativecommons.org/licenses/

# The Uniqueness of the Mass Communication Culture of Jaffna Villages Some Observations

# யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனத் தொடர்பியற் பண்பாட்டின் தனித்துவம்: சில அவதானிப்புகள்

**கலாநிதி எஸ். ஸ்ரீபிருந்திரன்**
விரிவுரையாளர்,
இலத்திரனியல் விரிவாக்கல்துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
*Correspondence: breindran@nie.edu.lk*
*Submitted: 20.05.2025 Revised: 10.06.2025 Accepted: 20.06.2025*

**Abstract:**

Communication patterns reflect the distinct cultural identity of rural communities. This study explores the unique characteristics of mass communication practices in the villages of Jaffna. The mass communication systems that have historically existed in these villages are deeply intertwined with human communication and continue to retain their traditional features today. These systems, along with the lifestyle and rituals of the people, contribute significantly to the preservation and reinforcement of Jaffna village culture.

The primary objective of this study is to identify mass communication practices that are uniquely embedded within the cultural fabric of Jaffna villages. Historically, mass communication has served as a tool for both the dissemination of information and entertainment, as well as for the preservation of cultural values and traditions. Technological and scientific developments have further influenced these communication systems over time.

In the contemporary context, the influence of modern mass communication technologies continues to strengthen the vitality of Jaffna's rural culture. This study also considers the role of national identity and sociopolitical dynamics in shaping the region's communication landscape. The analysis is based on a descriptive research approach, utilizing secondary data and a literature review from cultural and sociological perspectives.

The struggles for equality and political empowerment among the Jaffna Tamil community have significantly contributed to the growth and direction of mass media in the region. Today, mass media serves as a platform for addressing issues of justice and supporting the region's post-war transformation. The study also suggests strategies for enhancing rural mass communication practices in ways that uphold and enrich local culture.

**Keywords**: Mass communication, Rural culture, Post-war transition, Mass Media culture, Media sociology,

**ஆய்வுச் சுருக்கம்**

கிராமங்களின் பண்பாட்டுத் தனித்துவத்தை தொடர்பாடல் வடிவங்கள் வெளிப்படுத்துகின்றன. யாழ்பாணக் கிராமங்களில் பயில் நிலையிலுள்ள வெகுசனத் தொடர்பியற் கூறுகளின்

தனிச்சிறப்புக்கள் இங்கு ஆய்வு செய்யப்பட்டது. யாழ்பாண கிராமங்களில் நிலவிய வெகுசனத் தொடர்பாடல் முறையை மனித தொடர்பாடலோடு இணைத்து நோக்கப்படவேண்டும். மரபுவழி வெகுசனத்தொடர்பியற் பண்பாட்டின் நிலவுகைகள் இன்று அதன் தனித்தன்மையுடன் பேணப்பட்டு வருகின்றன. வெகுசனத் தொடர்பாடலும் அதனோடு இணைந்த நம்பிக்கையுடன் கூடிய மக்களின் வாழ்க்கை முறையும், யாழ்பாணக் கிராமங்களின் பண்பாட்டை வலுவூட்டுவதாக அமைகின்றது.

யாழ்பாணக் கிராமங்களின் பண்பாட்டின் தனித்துவமான அம்சங்களான வெகுசனத் தொடர்பாடல் நடைமுறைகளை இனங்காணல் இவ்வாய்வின் முக்கிய நோக்கமாக அமைகின்றது. ஆரம்பகாலத்திலிருந்து தகவல் பரிமாற்றத்திற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் பயன்பட்ட கிராமங்களின் வெகுசனத் தொடர்பாடல் முறையானது மக்களின் பண்பாட்டுப் பேணலுக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

சமகாலச்சூழலில் வெகுசனத்தொடர்பாடல் தொழினுட்பத்தின் செல்வாக்குகள் யாழ்ப்பாணக்கிராம பண்பாட்டின் செயலொலுங்கினை வலுச்சேர்க்கின்றன. இவ்வாய்வில் வெகுசனத் தொடர்பியற் பண்பாட்டில் தேசியத்தின் தாக்கமும் விளைவுகளும் நோக்கப்படுகின்றன. யாழ்ப்பாணக் கிராமங்களின் தொடர்பியற் பண்பாட்டின் தனித்துவம் தொடர்பில் பண்பறிமுறையிலும், சமூகவியல் நோக்கிலும் இலக்கிய மீளாய்வு செய்து பெறப்பட்ட தகவல்கள் இக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமாக விவரணஆய்வுமுறையில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண தமிழ்ச்சமூகத்தின் சமத்துவத்திற்கும், அதிகாரத்திற்குமான போராட்டங்கள் வெகுசன ஊடகங்களின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்குமான பாரிய தோற்றுவாயாக அமைந்துள்ளது. போருக்குப் பின்னரான நிலைமாற்றத்துக்கான நீதியை தேடுவதற்காக வெகுசன ஊடகப்பண்பாடு நகர்த்தப்படுகின்றது. அத்துடன் கிராமிய வெகுசன தொடர்பியற் பண்பாட்டினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளும் பரிந்துரைக்கப்படுள்ளன.

**அருஞ் சொற்கள் :** வெகுசனத் தொடர்பாடல், கிராமியப் பண்பாடு, நிலைமாற்றத்திற்கான நீதி , வெகுசனப் பண்பாடு, ஊடகச்சமூகவியல் .

## அறிமுகம்

கடந்த காலங்களில் தோன்றியதாகக் கருதப்படும் அறிவுறுத்தலுக்கும் இன்றைய காலத்தின் கிராமங்களின் செயல்களுக்குமிடையிலான தொடர்புகள் பற்றிய விவகாரத்தையும் விசாரணையையும் உள்ளடக்கிய அகன்ற பரப்பாக வெகுசனத் தொடர்பாடல் பண்பாடு பற்றியதுமான ஒரு கருத்தியல் மானிட விஞ்ஞானத்தில் நிலவுகிறது. இங்கு பண்பாடு என்பது மக்கள் கற்றுணர்ந்த நடத்தை முறையின் (Learned behaeiour) தொகுப்பு என்று கூறலாம். இங்கு கற்றுணர்ந்த நடத்தைமுறை என்பது முழுக்க முழுக்க மக்களின் அறிதிறனோடு (Cognition) தொடர்புடையது. (பக்தவத்சல பாரதி,2014:228). இந்நிலையில் வரலாற்றாளர், சமூகவியலாளர், தொடர்பியலாளர் ஆகிய மூவரும் கிராமியப்பண்பாட்டு அனுபவங்களின் கூறுகள் பற்றித் தாம் பேசியும் சிந்தித்தும் வருகின்றனர். மனிதனுடைய வாழ்நிலைகளின் சாரம்சமாகக் காணப்படுகின்ற ஒழுக்காற்று நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், தொடர்பாடல் செயலொழுங்குகள், சுற்றி இருப்பவை பற்றிய உணர்வு நிலைகள் முதலியவற்றைக் குறிப்பது கிராமியப் பண்பாடாகும். சமூகக்குழுக்கள் கிராமங்கள் குடும்பங்கள் என்ற நிலைகளில் காணப்படும் திரள் நிலைப்பட்ட மக்கள் கூட்டத்தின் தொடர்பியல் உறவுகள், கலை அழகியல் வெளிப்பாடுகள், வழிபாடுகள் என்று கிராமிய பண்பாடுகள் பரந்துபட்டுக் காணப்படும். கிராம மனிதன் தன்னுடைய சமூக இருப்பு வெளியில் தொடர்ந்து பயணிப்பதற்கும், தனக்கானவற்றைத் தேடவும், ஒரு தனி மனிதனாகவும் ஒரு சமூகமனிதனாகவும் தன்னை அடையாளப்படுத்திக் காட்டவும் வெகுசனத் தொடர்பியல் பண்பாடு அவசியமாகின்றது. மானிடத் தொடர்பின் செயலொழுங்கில் அது பிரபல்யப் பண்பாட்டு (Popular Culture) செயலொழுங்காக மாற்றம் பெறும்போது தொடர்பியல் பண்பாடானது வெகுசனத் தொடர்பாடல் பண்பாடாக எழுச்சி பெறுகின்றது.

கிராமங்களில் இடம்பெறும் வெகுசனத் தொடர்பாடலின்போது பார்வை மற்றும் கேட்கும் திறனும் அர்த்தமுள்ள காரணிகளாக விளங்குகின்றன. அதுவே கிராமங்களின் வாழ்க்கை வடிவத்தை மாற்றியமைக்கும் முக்கிய காரணிகளாகவும் அமைந்தன. எவ்வாறாயினும் பொதுக் கருத்துக்களின் தோற்றத்திற்கு ஆரம்ப காலத்தில் கிராம வாழ்வில் வெகுசனத் தொடர்பாடலானது சடங்குகள், ஐதிகங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தன (மௌனகுரு,சி.,1993:04). கால ஓட்டத்தில் சமகால அறிவியற் போக்கின் அபரிதமான பல பரிமாணங்களில் நிகழ்ந்த மாற்றங்களை வெகுசன தொடர்பாடல் தனதாக்கிக்கொண்டது. இத்தகைய அறிவியல் போக்கின் தொழிநுட்ப அறிவின் வேகமான பாய்ச்சலானது கிராமங்களின் வெகுசனப் பண்பாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இன்று வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டின் இருப்பு தொழிநுட்பஅறிவின் இருப்பிலேயே தங்கியுள்ளது. வளர்ச்சியடைந்து வரும் விஞ்ஞான தொழிநுட்பக் கண்டுபிடிப்புகளின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடனேயே கிராமங்களின் வெகுசனத் தொடர்பாடல் பண்பாடு செயற்படுகின்றமையும் காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனத் தொடர்பியல் பண்பாடு பற்றிய சமூகவியல் ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக உலகப் புகழ் பெற்ற சமூகவியல் ஆய்வாளர்களான என்.ஜே. தம்பையா, சித்தார்த்தன் பேரின்பநாயகம் போன்றோரின் ஆய்வுகளும் யாழ்ப்பாணச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட மேல்நாட்டு அறிஞர்களான Bryon Plaffen Berger, Henneth David Shjonberg போன்றோரின் ஆய்வுகள் வெவ்வேறு சமூகநிலைபட்ட முடிவுகளை முன்வைத்துள்ளன. வெகுசனத் தொடர்பியல் செயன்முறைகள் குறித்து அவ் ஆய்வுகள் பூரண கவனம் செலுத்தவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் கிராமங்களின் இடம்பெறும் சமூக மாற்றங்களுக்கு அடிப்படையாக அமையும் வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டின் தனித்துவத்தை ஆய்வு செய்வது அவசியமாகிறது.

## மரபுவழி வெகுசனத் தொடர்பியற் பண்பாடு

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணமானது அழகிய வயற் சூழல்களையும், பனை வடலிகளையும், கடற்கரைகளையும் கொண்ட இயற்கை எழில் மிக்க பிரதேசமாகும். பெரும்பாலும் சமதரையான பௌதீகக் கட்டமைப்பை உடைய யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் தோறும் மக்கள் கூட்டம் தமக்கே உடைய அடையாளங்களோடும், சீரிய மொழிப் பண்பாட்டுடன், விழுமியங்களைப் பற்றிய பண்பட்ட வாழ்க்கையை வாழ்பவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு பண்பாடு கடத்தப்படுகின்றது. திருமணமாகிக் குழந்தைகள் பெறும்போது ஒரு புதிய தலைமுறை தோன்றுகின்றது. முதியோர் விடைபெற இளையதலைமுறை சமூகபொறுப்புகளை ஏற்கிறது இதுவே யாழ்ப்பாண தமிழ்சமூகத்தின் தொடர்ச்சியையுந் தனித்துவத்தையும் உறுதிப்படுத்தும் (இராமகிருஷ்ணன.வே.,2001:30). என யாழ்ப்பாண பண்பாட்டின் செயலொழுங்கை கலாநிதி.வே.இராமகிருஷ்ணன் அதன் தொடர்ச்சியாக விபரிக்கின்றார் யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் வாழும் மக்களின் வெகுசனத் தொடர்பியல் பண்பாட்டை ஆய்வு நோக்கில் சிந்திக்கும் போது அங்கு ஒருவகையான மூடிய பண்பாட்டுப்போக்கு (Close Culture)க் காணப்படுவதை ஆரம்பகாலங்களில் கண்டுகொள்ள முடிந்தது. அதாவது அங்குள்ள மக்கள் கூட்டத்தில் அனைவரும் தம் சமூகத்தின் செய்தியை அல்லது தகவலை வெளியிடுவதற்கு விருப்பப்பட்டவர்களாக, அல்லது அனுமதிக்கப்பட்டவர்களாக இருக்கவில்லை. யாழ்ப்பாணக் கிராமங்களில் அல்லது குறிச்சிகளில் வாழ்ந்த மக்களில் குறிப்பிட்ட ஒரு நபரே தம் சமூகம் தொடர்பான தகவலை வெளியிடத் தகுதியாகக் காணப்பட்டார். உதாரணமாக மீன்பிடிச் சமூகநிலைப்பட்ட மக்களிடையே பொதுத்தொடர்புபடுனராக தெரிவு செய்யப்பட்ட நபர் ஒருவர் இயங்குவார், அவர் சம்மாட்டியாக கூட இருக்கலாம் அதே போல் விவசாய சமூகக்குழுக்களிடையேயும் தெரிவு செய்யப்பட்ட பொதுத்தொடர்பினர் ஒருவர் இயங்குவது வழமையாகும். இது யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற எல்லாச் சாதிக்குழுங்கள் மத்தியிலும் பொதுமைப்படுத்தப்பட்ட அம்சமாகக் காணப்பட்டது. பொதுவாக, பெண்கள் வெளியில் வந்து தகவல்களை அல்லது செய்திகளை வெளியிடுவதற்குச் சாதாரணமாக பாரம்பரிய யாழ்ப்பாண சமூகத்தில் அனுமதிக்காத நிலைப்பாட்டைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால்தான் யாழ்ப்பாணப் பண்பாட்டைக் 'கிடுகுவேலிப்பண்பாடு' எனவும் கூறுவர். குறிப்பாக, மக்களின் தகவல்களைப் பெறுவதில் சில ஒழுக்க நியமங்கள் பின்பற்றப்பட்டன. அத்துடன் கிராமங்களில் இடம்பெற்ற எல்லாத் தகவல்களும் பொதுமைப்படுத்தப்பட்டு வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டுடன் சேர்ந்தியங்கவில்லை. இங்கு சமூக நன்மை கருதிய தகவல்களும் செய்திகளுமே பொதுமைப்படுத்தப்பட்ட செய்திகளாகப்பரவலடைந்தமை

ஆரம்பகால யாழ்ப்பாண வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டிற்குரிய பிரத்தியேகமான தனித்துவமாகும். இந்நிலையானது யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களின் ஆரம்பத்துடன் சிறிதுசிறிதாக மாற்றமடைந்ததையும் அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணக் கிராமங்களில் நிலவிய வெகுசனத் தொடர்பாடல் முறமையானது மனிதத் தொடர்பாடலோடு இணைத்து நோக்கப்பட வேண்டியதொன்றாகும். இது ஒரு மனித வாழ்வியல் செயலொழுங்கு முறையெனினும் குறுகிய நோக்கங் கொண்டதல்ல. இவை கிராமியப் பண்பாட்டில் வேரூன்றி உள்ளதால் யாழ்ப்பாணக் கிராமங்களின் பண்பாட்டின் அடித்தளத்தைத் தேடுவதற்கும் வெகுசனத் தொடர்பாடல் வடிவங்கள் உதவுகின்றன. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக யாழ்ப்பாணக் கிராமங்களில் காணப்பட்ட சடங்கு சார்ந்த நிகழ்ச்சிகள், சடங்கு சாராத நிகழ்ச்சிகள், நம்பிக்கைகள் அதன் வழிவந்த வழிபாட்டு முறைகள், வாழ்வியல் நடைமுறைகள், கல்வி, பண்பாட்டு அம்சங்கள் அன்றாடக் கடமைகள், செயலொழுங்குகள் போன்றவற்றில் காணப்படும் வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டின் பரம்பலை இனங்கண்டு கொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாணக் கிராமங்களில் உயிர்ப்புடனும் துடிப்புடனும் தொடர்ந்தும், இருந்துவருகின்ற வெகுசனத் தொடர்பாடல்பண்பாட்டின் தலையானவையாக வாய்மொழி, வழக்காற்று கதைகள், தொன்மங்கள் ஆகியவற்றையும் சடங்கியல் செயற்பாடுகளையும் குறிப்பிடலாம். 'சடங்கு என்பது கால நடைமுறை தான். ஆனால் உழைப்புப் போக்கிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையாகும்' என்பர் ஜோஜ் தொம்சன் (ஜோர்ச் தொம்சன்,1981:68). கிராம மனிதன் தான் நடைமுறையில் செய்த காரியங்களை ஓய்வு வேளையில் செய்துபார்த்தான். அதன் மூலம் ஒரு வக்கயான வெகுசனத் தொடர்பியல் கிளர்ச்சியை அடைவான். எனவே அதனை மீண்டும் மீண்டும் செய்து பார்த்து ரசனை கொண்டான். இதுவே வெகுசனத் தொடர்பாடலின் எழுச்சியாக அமைந்தது. மனிதனின் செயலாக்கம் அதன் அடியான சடங்குகளும் கரணங்களும் ஐதிகங்களும் இவ்விதமே கிராம மனிதனின் தொடர்பாடல் பண்பாட்டை மேம்பாடடைய வைத்தது. யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் நிலவிய இந்தச் சடங்கியல் செயற்பாடுகள் இருவகைப்படும். முதலாவது வகையானது சமயம், வழிபாடு, வரலாறு ஆகியவற்றைக் மையமிட்டு வளர்ச்சியடைந்த வெகுசனத் தொடர்பாடல் முறைமை. இதனூடாக வாய்மொழிக் கதைகள், தொல்மரபுக்கதைகளை அடியொற்றியும் அவற்றை மீளாக்கம் செய்யும் வகையிலும் நிகழ்த்தப்படுவன. இரண்டாம் வகையானது மனித உடலையும், சமூகச் செயல்நிலைகளையும், மகிழ்விப்புக்களையும், உலகப்பார்வையை வெளிப்படுத்தும் வகையிலான வெகுசனத் தொடர்பாடலாகவும் அமைந்தது. இன்றுவரை யாழ்ப்பாண கிராமங்களில் காணப்படும் தூது, நாட்டார் பாடல்கள், கும்மிப்பாடல்கள், ஒப்பாரி, கதாப்பிரசங்கங்கள், நாட்டுக்கூத்துகள் போன்ற கலை வடிவங்களை அவதானித்து ஆய்வு செய்வதன் மூலம் கண்டு தெளியலாம்.

இந்நிலையில் யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டின் தோற்றுவாயாக யாழ்ப்பாணத்தில் நிலவிவரும் கந்தபுராணப்பண்பாட்டை அடையாளப்படுத்த முடிகிறது. குறிப்பாக யாழ்ப்பாணக் கிராமங்களின் வழிபாட்டு மரபையும் கல்வி மரபையும் புலப்படுத்தும் கந்தபுராண கலாசாரம் என்கின்ற புராணபடன மரபும், யாழ்ப்பாணத்திற்கே உரித்தான வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டின் தளத்தில் செவிவழித் தொடர்பாடல் வடிவமாக (Oral communication form) முதன்மைப்படுத்தப்படுகிறது. இதனடியாகவே யாழ்ப்பாணக் கிராமங்களில் கோயிலை மையமாகக் கொண்டு சமய சமூகக்கருத்துகள் மக்கள் கூட்டத்தினரிடையே பரவலடையச் செய்யப்பட்டது. இவையாவும் யாழ்ப்பாணக் கிராமிய வெகுசனப்பண்பாட்டின் மூலவேர்களாகவே அமைகின்றன.

கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் செய்திகளும் தகவல்களும் செவிவழியாகவே மக்கள் கூட்டத்தினரிடையே காவிச் செல்லப்பட்டதை அங்கு காணப்படும் கதை சொல்லல் முறைமைகளும், பிற சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன. கிசுகிசுக்கள் மற்றும் அவசியமான தகவல்கள் யாவும் செவிவழியாகவும், குழும உரையாடல்கள் வாயிலாகவும் வெளிப்பட்டன. வயல்வேலைகளின் போதும் மீன்பிடித்தல் இதர தொழில் செயற்பாடுகள், ஆலயங்களிலும், பிற பொது இடங்களில் கூடிப்பழகும் மக்கள் கூட்டத்தினர் பண்பாட்டுத்தளத்தில் நின்றுதான் வாய்மொழித் தொடர்பாடலில் ஈடுபட்டனர் யாழ்ப்பாணத்தில் பயில்நிலையில் காணப்படும் நாட்டார் கலைவடிவங்கள் மரபுவழி வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டையே பிரதிபலிப்பனவாக அமைகின்றன. இதில் கும்மிப்பாடல்கள், ஏர்ப்பாடல், மீனவப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் போன்ற நாட்டார் பாடல் வடிவங்களும் அவற்றின் ஆற்றுகைப் பண்புகளும் தூது, பறை, நாட்டுக்கூத்துகள், கதாப்பிரசங்கங்கள் போன்ற மரபுவழிக்கலை வடிவங்களும் சிறப்பாக யாழ்ப்பாணத்து கிராமங்களில் நிலவிய மக்கள் மயமாக்கப்பட்ட வெகுசனத் தொடர்பாடல்

பண்பாட்டை வெளிக்காட்டுகின்றன. யாழ்ப்பாணத்தின் வாழ்வியல் கோலங்களை ஆய்வு செய்த பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா "யாழ்ப்பாண மக்களின் பண்பாடு, நடைஉடைபாவனை, உணவு வழிபாடு, நம்பிக்கை மொழிவழக்கு முதலானவற்றை சமூகவியல் பின்னணியில் ஆய்வு செய்வதற்கு கும்மிப் பாடல்கள் பெரிதும் உதவும்" எனக் குறிப்பிட்டுள்ளார் (சிவலிங்கராசா, எஸ், 2003:41). இதனூடாக நோக்கும் போது யாழ்ப்பாணக் கிராமங்களின் பண்பாட்டுப் பரவுகைகளையும் கிராமிய மேம்பாட்டினையும் அடையாளப்படுத்துவதாகஅமைகின்றன. அதேபோன்று யாழ்ப்பாணக்கிராமத்து மக்களின் வாழ்வியலையும், கவித்துவத்தையும் புலப்படுத்துவது ஒப்பாரிப் பாடல்கள் ஆகும். அவை பெரும்பாலும் எல்லாக் கிராமங்களுக்கும் பொதுவானவையானவே காணப்படுகின்றன். இவை வாய்மொழித் தொடர்பாடலாக பரம்பரைபரம்பரையாகக் கையாளப்பட்டு வந்தவைகளாகும். இவையும் யாழ்ப்பாணக் கிராமங்களில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களையும் கிரமிய மேம்பாட்டையும் எடுத்தியம்பவதாகவே உள்ளன. யாழ்ப்பாண கிராமங்களின் மரபுவழி வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டை தூது, பறை வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துக்கள், சிந்துநடை காத்தான் கூத்து, கதாப்பிரசங்கங்கள் போன்ற கிராமியக் கலை வடிவங்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன. அதே போன்று யாழ்ப்பாணத்தின் கிராமங்களிற் பயிலப்படும் சாஸ்திரியமயப்பட்ட கர்நாடக சங்கீதமும், பரதநாட்டியம், கதகளி போன்ற கலைகளும் சமகால வெகுசனத் தொடர்பாடலின் பண்பாட்டுப் பரவலுக்கு ஏற்றவாறு நெகிழ்ச்சியடைந்து பயிலப்பட்டதையும் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது. ஒருவர் தம்முடைய உள்ளக்கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கத் தக்கவாயிலாகக் கூறிவிடுவது தூது ஆகும்.

பண்டைய காலத்தில் நிலவிய இருவழித் தொடர்பாடல் வகையாக தூது அமைந்தாலும் பல சந்தர்ப்பங்களில் தூது வழி வந்த தகவல்கள் கிராமங்களில் பொதுமைப்படுத்தப்பட்டு வெகுசனத்தொடர்பாடல் பயன்பாட்டைப்பூர்த்தி செய்வதாகவும் அமைகின்றன. ஈழத்தின் இலக்கிய, இலக்கண நூல்களில்தூது குறித்த செய்திகள் உள்ளன. அதே போல யாழ்ப்பாண வெகுசனத் தொடர்பாடலின் 'பறை' என்பது முக்கியமான ஒரு இசைக்கருவியாகும். பழங்காலத்தில் விரைவாகச் செய்தி தெரிவிக்கப்பயன்படுத்தப்பட்ட தொடர்புச்சாதனங்களில் பறையறைதலும் ஒன்றாகும். கிராமத்தில் ஓரிடத்தில் அடிக்கும் பறை ஒலியைக் கேட்டு தூரத்திலுள்ளவன் தன்னிடமுள்ள பறையை அறைந்து அந்தச்செய்தியை அடுத்த பறையை அடிப்பவனுக்கு அறிவிப்பான். இவ்வாறு செய்திகள் தொலைவிற்கும் அனுப்பப்பட்டன. குறிப்பாக, மரணச்சடங்குடன் தொடர்புபடும் அமங்கல நிகழ்வுகளில் பறை முக்கிய தொடர்பியல் சாதனமாக அமைகின்றது. கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் தண்ணீர்த்தட்டுப்பாடு, மின்சாரத்தடை பொதுக்கூட்டடங்கள் போன்றவை தொடர்பான செய்திகள் பரவவும் பறையடித்தல் முறை உதவியது. அதே போன்று சங்கு, சேமக்கலம் போன்றனவும் யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனத் தொடர்பாடலுக்கு உதவிய கருவிகளாக அமைகின்றன.

கிராமப்புறக்கலை என்பது பொதுவாக மக்களின் பண்பாடாகும், கலாசாரப் பாரம்பரியங்கள் போன்ற மனிதனின் வாழும்நெறியை வெளிப்படுத்தக்கூடியதாகும் என அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஆவண்டனடஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். இந்நிலையில் இன்றும் அழிந்தும் அழியாமற் காணப்படும் நாட்டுக்கூத்துகள் அடுத்து முக்கியம் பெறுகின்றன. கதையாகவும், ஆற்றுகை செய்தல்மூலமாகவும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வெகுசனப் பண்பாட்டை ஜனரஞ்சகமாக வெளிப்படுத்துவதற்கு உதவியாக அமைகிறது. குறிப்பாக தென்மோடி, வடமோடிக் கூத்துக்களும் சிந்துநடை காத்தவராயன் கூத்துக்களும் யாழ்ப்பாணத்தின் வெகுசனப் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அதே போன்று தனிநபர் ஒருவர் இசையோடு கூடிய பாடல்களை இடையிடையே கதையைக் கூறிச் செல்லும் காதாப் பிரசங்க முறையும் கல்வியறிவு குறைந்த பாமர மக்களுக்கு ஒரு முறைசார் தொடர்பாடலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமைகின்றது (ஸ்ரீதயாளன், எஸ், 2017:10). யாழ்ப்பாணக் கிராமங்களில் ஆரம்ப காலத்தில் வெகுசனத் தொடர்பாடலின் போது பார்வை மற்றும் கேட்கும் திறனும் அர்த்தமுள்ள காரணிகளாக அமைந்தன. இதுவே கிராமங்களின் வாழ்க்கை வடிவத்தை மாற்றியமைப்பதில் முக்கிய காரணிகளாக அமைந்தன. பொதுக்கருத்துக்களின் தோற்றத்திற்கு ஆரம்பகாலங்களில் யாழ்ப்பாணக் கிராமங்களில் காணப்பட்ட பாரம்பரியத்தொடர்பாடல் வடிவங்களும் சடங்குகளும் ஐதிகங்களும் முக்கிய காரணிகளாக அமைந்தன என்பது இதனால் வெளிப்படுகின்றது.

## வெகுசனப் தொடர்பாடற் பண்பாடும் அறிவியல் வளர்ச்சியும்.

மனிதவாழ்வில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியின் காரணமாக யாழ்ப்பாணக்கிராமங்களின் வெகுசனப் பண்பாடானது உயர்பண்புகளுடன் வளர்ச்சியடையத் தொடங்கியது.

தகவலுக்கும் பொதுக் கருத்துக்குமிடையிலான வெகுசனத் தொடர்பாடல் பற்றிக் கவனம் செலுத்தும் போது தற்காலத் தொழிநுட்ப வளர்ச்சியின் காரணமாக, கடந்த காலங்களில் ஏற்பட்ட கிராமியப் பண்பாட்டின் மேம்பாடுகளே தெரியவருகின்றது. வெகுசனத் தொடர்பாடல் வளர்ச்சியால் திரள் நிலைப்பட்ட மக்கள் கூட்டத்திற்கான, சமூகத்திற்கான தகவல் பரிமாற்றம் செய்யும் சாதனங்களாக ஊடகங்கள் எழுச்சி பெற்றன. சமூகப் பண்பாட்டின் வெளிப்பாடுதான் ஊடகம் என்பது சமூகவியல் உண்மையாகும். ஊடக சமூகவியல் துறையானது (Media Sociology) இன்று ஆய்வுத் துறையாகத் தனியாகவே நோக்கப்பட வேண்டியதொன்றாகும்.

யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனத்தகவல் பரிமாற்றத்தின் வளர்ச்சிப் போக்கு மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. இங்கு கட்டுறுதியான வெகுசனப் பண்பாட்டை இனங்காண முடிகிறது. சாதாரணமாக எழுத்து வாசிப்புப் பயிற்சிகளையுடைய யாழ்ப்பாணத் தமிழர்களின் அன்றாடச் சமூக ஊடகத்தின் தொடர்புகளில் வெகுசனப்பண்பாடு என்பது ஒன்றாகும். பத்திரிகை, சினிமா, வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஆகிய பல்வேறுபட்ட வெகுசனத் தொடர்புச்சாதனங்களில் தமிழ் மக்களின் ஈடுபாடுகள் விருப்பு வெறுப்புக்களின் சார்பு சார்பின்மைகளைச்சுட்டிக்காட்டுவதற்கு வெகுசனப்பண்பாடு என்ற கருத்துநிலை பெரிதும் பயன்படுகிறது.

இந்நிலையில் இலங்கையின் முதல் தமிழ் பத்திரிகையான உதயதாரகையின் கருக்கட்டல் முதல் இன்றைய உதயன் பத்திரிகை வரையும், ஏன் அதன் பின்னர் எழுச்சி பெற்ற வலம்புரி போன்ற பத்திரிகைகள் சிறப்பாக யாழ்ப்பாண மக்களின் செய்திப் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றன. இலங்கையின் வேறு எந்தப் பிரதேசத்திலும் பிரதேச ரீதியான பத்திரிகை எழுச்சி பெற்று வளர்ச்சியடையாத நிலையில் யாழ்ப்பாணத்தில் முன்னர் வெளிவந்த ஈழநாடு, ஈழநாதம், தினமுரசு, முரசொலி என்பனவும் இன்றும் வெளிவரும் உதயன், வலம்புரி, காலைக்கதிர் போன்ற பத்திரிகைகளும் யாழ்ப்பாணக் கிராமங்களின் வாழ்வியற் தேவையாகவும் அன்றாடத் தேவையாகவும் தொழிற்படுகின்றன. செய்திகள் விளம்பரங்களைத் தெரிந்து கொள்வதோடு அன்றாடம் தமது கிராமங்களில் இடம்பெறும் நிகழ்வுகள், தெரிந்தவர், அறிந்தவர்களின் மரணச் செய்திகளைத் தெரிந்து கொள்வதற்கும் யாழ்ப்பாணக் கிராமங்களில் பத்திரிகைகள் அவசியமாக உள்ளன.

யாழ்ப்பாண கிராமங்களின் மண்வாசனைகளைப் பிரதிபலிக்கும் பத்திரிகைகள் காலங்காலமாக மக்களுக்கு ஏற்ற செய்திகளை வெளியிடுகின்றன. கடந்த யுத்த காலத்தில் தமிழ் மக்களின் அவலங்களை, துன்பதுயரங்களை மட்டுமன்றி தமிழ் மக்களுக்கெதிரான வன்முறைகளை வெளிடுவதில் பல அழுத்தங்கள் மத்தியிலும் யாழ்ப்பாணக் கிராமங்களின் பண்பாட்டுத் தளத்தில் நின்றே பத்திரிகைகள் செயற்பட்டன எனலாம். யாழ்ப்பாணக் கிராமங்களில் எழுச்சி பெற்ற தமிழர் விடுதலைப் போராட்டக்கருத்துகளையும், தமிழ்த் தேசியச்சிந்தனைகளையும் மாக்சிசசிந்தனை களையும் வெகுசனப் பண்பாட்டின் ஊடாகப் பரவலடையச் செய்வதில் யாழ்ப்பாணப் பிரதேசப் பத்திரிகைகளின் பணிகள் அதிகமாகவே அமைந்தன.

இலங்கையின் புகைப்படக்கலையின் (photography) முதற்களம் யாழ்ப்பாணம்தான் என்று வரலாற்ராசிரியர்கள் இனங்கண்டுள்ளனர். இலங்கையின் முதற்ப் புகைப்படம் வட்டுக்கோட்டைச் செமினறியிலேயே பிடிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. இலங்கையின் முதலாவது புகைப்படக்கலைஞராக கென்றி மாட்டின் என்ற யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டை செமினறி ஆசிரியர் அடையாளப்படுத்தப்படுகிறார். எழுத்திலே காட்டாத காட்ட விரும்பாத யாழ்ப்பாண வெகுசனப் பண்பாட்டுக் கோலங்களை வட்டுக்கோட்டை செமினறியினர் பிடித்த படங்களினூடாகக் காணமுடிகிறது. யாழ்ப்பாணத்துப் பெண்கள் கட்டும் குறுக்குக்கட்டு, ஆண்கள் கட்டும் கோவணம், கொடுக்குக்கட்டு, ஆண்கள் கட்டும் வேட்டிகளைக் கொண்ட, சால்வை, பெண்கள் அணியும் தாவணி அணிகலன்கள்போன்றவற்றின் மெய்யுருக்களை இப்புகைப்படங்கள் வாயிலாகத் காணமுடிவதோடு யாழ்ப்பாணக்கிராமங்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களையும் அடையாளங்காணக்கூடியதாக உள்ளன. இன்றைய நவீன புகைப்படங்களின் வளர்ச்சிகள் எண்மத்தொழிநுட்பத்திலான புகைப் படக்கலை மரபை யாழ்ப்பாணக் கிராமங்கள் தன்னகத்தே உள்ளெடுத்துக் கொண்டாலும் யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனப் பண்பாட்டுடன் புகைக்படக்கலை ஒன்றியே உள்ளது. யாழ்ப்பாணத்தின் வெகுசனப் பண்பாட்டில் புகைப்படக்கலையானது சாதாரண குடும்ப நிகழ்வுகளில் இருந்து சமூக அரச நிகழ்வுகளின் அடையாளங்களாக அமைவதோடு கிராமிய மேம்பாட்டின் படிநிலைகளையும் வெளிக்காட்டும் வெகுசனத்தொடர்பாடல்படிமாகவும் அமைகின்றன.

யாழ்ப்பாணத்தின் கிராமங்களில் ஒரு ஜனரஞ்சகப் பண்பாடு வளர்வதற்கு வானொலிகள் முக்கியமாக காரணியாக அமைகின்றன. யாழ்ப்பாண கிராமங்களின் பண்பாட்டுப் பேணுகையில் வானொலிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. அத்தோடு மொழி விருத்தி, பேச்சுத்தெளிவு, உச்சரிப்புக்கையாட்சி போன்றன கிராமங்களிடையே செழுமை பெறவும் வானொலியின் வருகையும் கிராமப்புறப் பயனாளிகளிடையே மாற்றங்களை ஏற்படுத்தின. இவை யாழ்ப்பாணக் கிராமங்களில் உள்ள பாமர மக்களின் இரசனைக் குரிய ஊடகமாகத் தொழிற்பட ஆரம்பித்தன. தமிழ் நிலைப்பட்ட வானொலிகளின் பயனாளிகள் இடையிலான களஆய்வுகளின்படி இலங்கையில் யாழ்ப்பாணம் அல்லாத ஏனைய பிரதேசங்களில் உள்ள மக்களின் ஜனரஞ்சக ஊடகமான வானொலியின் நுகர்வுத்தன்மை யாழ்ப்பாணத்தவிட ஒப்பீட்டளவில் அதிகமாகவே காணப்படுகிறது. இருப்பினும் செய்திகள் மற்றும் கல்விசார் வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுப்போர் அதிகமாக யாழ்ப்பாணத்து நேயர்களாகவே உள்ளனர்.

யாழ்ப்பாணக் கிராமங்களின் காணொளி ஊடகமான தொலைகாட்சிகள் வெகுசனப் பயன்பாட்டின் பிரதிநிதிகளாகவே செயற்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் சினிமாப்பண்பாடு வேரூன்றுவதற்கும், பிற பண்பாட்டுக் கலாசாரங்களைக் கிராமங்கள் உணர்ந்து கொள்ளவும் காண்பிய ஊடகமான தொலைக்காட்சி ஊடகங்கள் அடிப்படையாகின்றன. அரசதேசிய தொலைக்காட்சி ஒளிபரப்புகள் சிங்கள பேரினவாதக் கருத்துக்களைப் பரவலடைய வைக்கும் நோக்குடனும், தனியார் தொலைக்காட்சிகள் விளம்பரம், இலாப நோக்குடனும் செயற்படுகின்றன. இவற்றின் தகவல்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் உள்ளடக்கத்தின் செயலொழுங்கு குறுக்குபண்பாட்டுத் தொடர்பாடலாக (Cross culture communication) அமைகின்றன. வாழ்க்கையில் வெற்றி அழகு பற்றிய நமது கருத்துக்கள் எல்லாமே பண்பாட்டின் பகுதிகள். இவை நமது குடும்பங்களில் சமூகங்களில் வெகுசன ஊடகங்களின் மூலமாக ஒரு விமர்சனமற்ற முறையில் உணர்வு பூர்வமற்ற முறையிலும் நம்மை வந்து அடைகின்றன.

யாழ்ப்பாணக் கிராமங்களின் செய்திகளைப் பரவலடைய வைப்பதில் இன்றைய எண்மத் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலமாக (Digitalization) உருவான சமூக ஊடகங்களின் (Social Media) செயலாற்றுகை முக்கியமாக அமைகிறது. யாழ்ப்பாணக்கிராமங்களின் செய்திகள் நவீன ஊடகங்கள், இணையங்கள் வாயிலாக உடனடியாகவே புலம்பெயர் சமூகத்திற்குப் பரிமாற்றப் படுகிறது. இது யாழ்ப்பாணக் கிராமங்களின் வெகுசனப் பண்பாட்டின் வேகமான தொடர்பாடல் பரவுகையாக அமைகிறது.

## வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டில் தேசியத்தின் தாக்கமும் விளைவுகளும்

யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தின் சமத்துவத்திற்கும் அதிகாரத்திற்குமான போராட்டம் வெகுசன ஊடகங்களின் உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்குமான தோற்றுவாயாக விளங்கியது. ஊடகவியலாளர்கள் தமது செயல் முனைப்பால் சமூக யதார்த்தத்தை மீளுருவாக்கம் செய்தார்கள். இதையே யாழ்ப்பாணக் கிராமங்களும் எதிர்பார்த்தன. எண்பதுகளில் கூர்மையடைந்த தேசிய நெருக்கடி யாழ்ப்பாணச் சமூகத்தில் பாரிய சமூக மாற்றங்களை தோற்றுவித்ததுடன் அம்மாற்றம் வெகுசன ஊடகச் செயற்பாடுகளிலும் எதிரொலிக்கலாயிற்று. சமூக மாற்றப் பணியில் மக்களை ஒழுங்கு திரட்டி அதற்கு வெகுசன ஊடகங்கள் கருவியாக பயன்பட வேண்டும் என்ற நிலைப்பாடு துளிர்விடத் தொடங்கியது. எண்பதுகளின் தொடக்கத்திலிருந்தே இலங்கையின் தேசிய இன நெருக்கடி கூர்மையடையாத போது யாழ்ப்பாண மக்களின் மனச்சனலங்கள் நிறைந்த வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டனர். இராணுவப்பிரசன்னம், கொலை, கொள்ளை, தீவைப்பு, ஊரடங்கு சட்டம் என இத்தகைய யுத்த நெருக்கடி நிறைந்த சூழலில் மக்கள் ஒடுக்கப்பட்டு அடக்கப்படுவதற்கு எதிராக யாழ்ப்பாணப் பிரதேச ஊடகங்கள் முன்னின்று செயற்பட்டன. அதனால் சினிமா, போன்ற மகிழ்வளிப்பு ஊடகச் செயற்பாடுகள் தொழிற்பட முடியாமல் போயின. குறிப்பாக, இவையாவும் அடக்கி ஒடுக்கப்பட்டவரின் குரலாகவே செயற்படலாயிற்று.

## போருக்குப் பிந்திய வெகுசன தொடர்பாடல் பண்பாடு.

கடந்தகால யுத்தத்தினால் அழிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பிரதானமான பிரதேசம் யாழ்ப்பாணமாகும். பல்லாயிரக்கணக்கான இளைஞர்களையும் புத்திஜீவிகளையும் இழந்த நிலையிலும் புனர்வாழ்வு பணிகள் கடினமாகும் போக்கும் காணப்படுகின்றது. கல்வி முறைகளும் இளந்தலைமுறையினருக்கு இன்னும் கிராமியப் பண்பாட்டின் பூர்விகத்தை உணர்த்துவதாகவே இருக்கின்றன. அத்துடன் போருக்குப்பின்னரான வெகுசனத் தொர்பாடல் படிமுறைகள்

பாரம்பரிய தகவல் பரிமாற்றக் கட்டமைப்பை விளக்குவதாகவும் தொழிற்படுகின்றன. போருக்குப்பின்னரான நிலைமாற்றத்துக்கான நீதியை தேடும் இக்கால கட்டத்தில் துண்டிக்கப்பட்ட நம்பிக்கை மற்றும் பரஸ்பர கௌரவம் பாதுகாக்கக்கூடிய விதத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதேச வெகுசன பண்பாடு பயனளிக்க வேண்டும். குறிப்பாக அபிவிருத்திகாண யாழ்ப்பாணக் கிராமிய மேம்பாட்டை நோக்கி இவை செயற்பட வேண்டும். குறிப்பாக போருக்குப்பிந்திய சமூகத்தில் யாழ்ப்பாணத்தின் வெகுசனப் பண்பாட்டுடன் வெகுசன ஊடகங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதோடு போருக்குப் பின்னரான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் வகையில் செயற்படுத்தல் அவசியமாகிறது. இவ்வேளையில் யாழ்ப்பாணக் கிராமங்களின் மேம்பாட்டில் வெகுசன ஊடகங்களின் பங்கு கொள்ளலும் அவசியமாகிறது. தம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் துணிந்த மக்கள் சுய மதிப்பீட்டையும் சுய அடையாளத்தையும் வெகுசன ஊடகங்களின் மூலமே உறுதி செய்கின்றனர். ஆகவே வெகுசன ஊடகங்களைச் சமூகத்தின் பயன்விளைவிக்கும் ஒரு சமூகச் சாதனமாக மீளஎண்ணக்கருவாக்கம் செய்ய வேண்டிய அவசியத்திற்கு நாம் வந்துள்ளோம். அந்த வகையில் யுத்தத்திற்கு பின்னரான யாழ்ப்பாண கிராமங்களில் இருந்து வெளிவரும் ஊடகங்கள் சமூக சிந்தனையோடு செயற்பட வேண்டும். யுத்த காலத்திற்குப் பின் அடக்குமுறைகளுக்குள் இருந்து வெளிவரும் இளைஞர்கள் குற்றச் செயல்களையும் நெறிபிறழ்வுகளையும் அறிக்கைப்படுத்தும் போது சமூக கிராம சீர்திருத்தச் சிந்தனைகளோடு செயற்பட வேண்டிய காலமிதுவாகும். வெகுசன ஊடகச் சட்டங்களையும் ஒழுங்கு நியமங்களுக்கும் உட்பட்டு செய்திகளை அறிக்கைப்படுத்துவது இன்றைய யாழ்ப்பாணத்து ஊடகங்களின் பண்பாட்டுத் தேவையாக உள்ளது.

## கிராமிய வெகுசனத் தொடர்பியற்பண்பாட்டின் மேம்பாடுகள்

இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து யாழ்ப்பாணத்து கிராமங்களில் வாழும் தமிழரின் வெகுசனப் பண்பாடு தனித்துவமான சில பண்புகளைக் கொண்டிருக்கின்றன. அவை அம்மட்டத்தில் கிராமிய பண்பாட்டு மேம்பாட்டை உயிர் பிழைக்கவைத்திருப்பதற்கும் பேணுவதற்குமான சவால்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றன. இத்தகைய சவால்களின் மத்தியில் யாழ்ப்பாணக் கிராமங்களின் நேர்த்தியானவையாக அடையாளம் காணப்படக்கூடிய வெகுசனப் பண்பாட்டுக்கூறுகள் சில இல்லாமல் இல்லை. அவற்றை முக்கியமாக இரு மட்டங்களில் அடையாளம் காண முடியும்.

முதலாவதாக ஒரு சமநிலை மட்டத்தில் வெகுசனத் தொடர்பாடலின் மூலம் கிராமியப் பண்புகளுடன் தமிழரை தமிழராகவே எப்போதுமே இனங்காண்பதற்கு உறுதுணை புரிவனவாக உள்ளமையாகும். யாழ்ப்பாணத்தின் வெகுசன ஊடகங்கள் கிராமியத் தமிழரின் பண்பாட்டின் தனித்துவத்தைப் பறைசாற்றும் சின்னங்களை விளங்கி யாழ்ப்பாணத் தமிழர் பண்பாடு அழிந்தோ அல்லது தூர்ந்தோ போகும் ஒரு செய்முறைத் தோற்றம் பெறாது பாதுகாத்து வருகின்றன எனலாம். யாழ்ப்பாணக் கிராமியப் பண்பாட்டின் ஆயுளை அகநிலை மட்டத்தில் இவ்வாறு வளர்த்தெடுப்பதோடு புற நிலையில் குறிப்பாக, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் பண்பாட்டினை மேலும் மெருகுபடுத்துவதற்கும் பரம்பல் அடைவதற்கும் வெகுசன தொடர்பாடல்கள் வாய்ப்பினை வழங்குகின்றன. இவ்வாறான சக்திகளே இரண்டாவது மட்டத்தில் இனங்காணப்படுகின்றன. இவை வெகுசனத் தொடர்பாடலின் மூலமாக சமூக, கல்வி, தொழிநுட்ப ரீதியான மாறுதல்களை ஏற்படுத்தும்.

யாழ்ப்பாணக் கிராமிய சமூக மட்டத்தில் ஏற்பட்ட நன்மையாகக் கருதப்படக்கூடியது வெகுசனத் தொடர்பாடலின் மூலமாக யாழ்ப்பாண கிராமியத் தமிழரின் பண்பாடு தன்னை சிறந்த தொன்றாக்கியதும் ஏனைய பண்பாடுகளுடன் இடையுறவு கொண்டமையினால் அப்பாண்பாடுகளின் விழுமியங்கள் அல்லது பெறுமானங்கள் யாழ்ப்பாண கிராமிய தொடர்பியல் பண்பாட்டின் மாற்றம் ஒரு நிலைக் காரணியாகும்.

இதன் மூலம் யாழ்ப்பாணக் கிராமத்து மக்களின் வெகுசனத் தொடர்பாடல் பண்பாடு இரு வகையில் பயனடைந்ததெனலாம். கிராமிய பண்பாட்டுடன் மோதிய பெறுமானங்கள் வெகுசன ஊடகங்களில் ஊற்றெடுத்த காரணத்தினால் அதனை மெருகுபடுத்துவதற்கு மாத்திரமன்றி, குறைபாடுகளுக்கு இடம் கொடுக்கக்கூடிய சில நன்மைகளையும் அடையாளங்களையும் கிராமிய பண்பாட்டை மேலும் சீர்திருத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் வாய்ப்பையும் அளித்தன எனலாம். மறுபுறம் இவ்வாறான பெறுமான மோதல்களால் யாழ்ப்பாண கிராமியப் பண்பாடு தனது வலிமையையும், சக்தியையும் மறு பரிசோதனை செய்து கொள்வதற்கான ஓர் உரைக்கலாகவும் அமைய முடிந்தது. வெகுசன ஊடகங்களின் பல்வேறு கோணங்களிலிருந்தும் களங்களிலிருந்தும் ஏற்பட்ட பாதிப்புகள் மத்தியில் யாழ்ப்பாணக் கிராமிய பண்பாடு தனது சிறப்பினை வெளிப்படுத்தி மேலோங்கி நிற்பதற்கும் அதன்

தனியாள்கையின் கம்பீரத்தை எடுத்துக் காட்டுவதற்குமான விழுமிய மோதல்கள் தொடர்ந்தும் துணைபுரிகின்றன. விழுமிய மோதல்களைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதில் வெகுசன ஊடகங்களின் பங்குபற்றல் மக்கியமானதாக அமைகின்றன. யாழ்ப்பாணக் கிராமங்களின் மக்கள் நுகரும் தமிழ் நிலைப்பட்ட வெகுசன ஊடகங்களின் ஊடுருவலாக அமையும் நிகழ்ச்சிகளின் தகவல்களின் கருப்பொருட்கள் கிராமிய பண்பாட்டின் சமூகப் பெறுமானங்களைப் பாதிக்கக் கூடிய ஒரு முக்கிய அச்சமாக சுட்டிக்காட்டப்படக்கூடியது. இவை கிராம, சமூகப் பெறுமானங்களுடன் தர்க்க ரீதியான அணுகுமுறையைப் பின்பற்றுவதாகும். இதன் வழியில் யாழ்ப்பாணக் கிராமங்களின் மதத்தின் வழி இடம்பிடித்துக்கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளின் பாற்பட்ட இயல்புகளைத் திரும்பவும் பரீட்சித்து அவற்றிற்கமைய வேண்டியவற்றை தக்கவைக்க வேண்டியவற்றைப் தக்க வைக்கும் ஒரு செய்முறையில் தானாகவே இயங்க முற்படலாம். அதன் வழி யாழ்ப்பாண கிராமிய பண்பாட்டில் நீண்ட காலமாக நிலவி வரும் சாதி முறை பலமிழப்பதற்கு வாய்ப்புகள் பெருகலாமென எதிர்பார்க்கலாம். அதே அலைவரிசையில் இன்னொரு முக்கிய மாற்றமாகத் கவனிக்கப்படக்கூடிய தமிழ் பெண்கள் நிலை பற்றியதாகும். வெகுசன ஊடகப் பயன்பாட்டின் வாயிலாக ஆணுக்கு பெண் நிகர் சமகானவே அதற்கும் மேலாகவே கணிக்கப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது.

இவற்றுக்கெல்லாம் வெகுசன ஊடகங்களின் தொழிநுட்ப முன்னேற்றம் பக்கபலமாக இருந்தது. யாழ்ப்பாண கிராமங்களின் வெகுசனத் தொடர்பாடலின் தரம் தவிர்க்க முடியாத வகையில் சில வரையறைகளுக்குட்பட்டதாயினும் அவற்றின் பங்களிப்பு மிக முக்கியம் பெறுகின்றது. குறிப்பாக உலகின் பல்வேறு களங்களில் சிதறிப் போயுள்ள யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வெகுசனப் பண்பாட்டை ஒன்றிணைப்பதில் வெகுசன ஊடகங்களின் சேவைகள் அடிப்படையாகின்றன. யாழ்ப்பாணத் தாய்ச் சமூகத்துடன் புலம்பெயர் உறவுகளின் உணர்வுகள் துண்டிக்கப்படக்கூடிய நிலைமையைத் தவிர்க்க இவை ஓரளவுக்கேனும் ஈடுசெய்யக் கூடியவையாகவுள்ளன.

## முடிவுரை

தொகுப்பாக யாழப்பாணக் கிராமங்களில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நிலவும் வெகுசன தொடர்பியற்பண்பாட்டில் ஏற்பட்டு வருகின்ற செயல் முறைப் பிணைப்பைப்பற்றி நோக்கினோம். இங்கு வெகுசனத் தொடர்பியற்பண்பாடு கிராமியப்பண்பாடு மேம்பாட்டில் முக்கிய கருவூலமாக அமைகிறது. யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் நிலவிய போர்ச்சூழலினூடாக மேற்கிளம்பிய வெகுசனத் தொடர்பியல் பண்பாடு மற்றும் இலங்கையில் மேற்கத்தேய காலணித்துவ ஆட்சியில் நிலவிய மரபுவழி வெகுசன தொடர்பாடல் பண்பாட்டுக் கூறுகளைப் பற்றியும் விபரித்தோம். யாழ்ப்பாணக் கிராமங்களில் காணப்பட்ட வெகுசனப் பண்பாட்டு மாற்றத்தையும் அதன் எழுச்சியையும் எடுத்துக் கூறினோம். எனினும் போருக்குப்பின்னரான வெகுசனத் தொடர்பாடல் பண்பாட்டு எழுச்சியின் சாத்தியப்பாடுகளும் இவ்வாய்வில் விதப்புரைக்கப்படுகின்றன. குறிப்பாக, ஆய்வின் அவதானிப்புகள் மூலமாக யாழ்ப்பாண கிராமங்களிலே காணப்படும் வெகுசனத் தொடர்பியற் பண்பாட்டின் கூறுகளை இனங்கண்டு கொள்ள முடிந்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1. இராமகிருஷ்ணன். வே, 2001, யாழ்ப்பாணக் கலாசாரம் தத்துவப் பின்னனி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
2. குருசாமி.மா.பா, 1998, இதழியல் கலை, குரு-தேமொழி, திண்டுக்கல்.
3. சிவத்தம்பி.கா, 1994, தமிழ்ச்சமூகவியல் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்புக்கள், நியூசெஞ்சரிபுக் ஹவுஸ், சென்னை.
4. சிவலிங்கராஜா.எஸ், 2003, யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், குமரன் புத்தக இல்லம், சென்னை.
5. பக்தவத்சல பாரதி, 2014, இலக்கிய மானிடவியல், அடையாளம், திருச்சி.
6. மௌனகுரு.சி, 1993, ஈழத்து தமிழ்நாடகஅரங்கு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
7. ஸ்ரீகுமார்.எஸ், 2006, மக்கள் தொடர்பியல், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை.
8. ஸ்ரீதயாளன்.எஸ்.,2017, இலங்கையிலும் தமிழகத்திலும் கதாப்பிரசங்கக்கலை, மணிமேகலை, பிரசுரம், சென்னை.
9. ஜோர்ச் தொம்சன், 1981, மனித சமூகசாரம், சென்னை.